

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் நடைபெற்று வரும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் அருணகிரிநாதர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (25.08.2024) நடைபெற்ற இரண்டாம் நாள் தொடக்க விழாவில் மாநாட்டு விழா மலரை உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.சுரேஷ்குமார் வெளியிட கோவை கௌமார மடம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் பெற்று கொண்டார். உடன் உணவு மற்றும் உண்வுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அரசக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைசார் பி.கே.சேகர்பாபு, ஆதின பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம். சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பூங்கொடி, கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அருண் நேரு ஒன்றிய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சிராஜ் பஸ் வானிடம் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளின் நலனை முன்னிட்டு வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்து வலியுறுத்தினார்.

### மாநாட்டுக்குக் காரணமான முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# 143 முருகன் திருக்கோயில்களில் ரூ. 50 கோடியில் திருப்பணிகள்!

## ‘அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில்’ – 21 தீர்மானங்கள் நிறைவேற்றம்!

பழனி, ஆக. 26 -

தமிழ்நாட்டில் தொன்மையான 143 முருகன் திருக்கோயில்களில் ரூ. 50 கோடி செலவில் திருப்பணிகள் தொடங்குவது பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு, பழனி - 2024 மாநாட்டு தீர்மானங்கள்

1. முதலமைச்சர் அவர்களின் தலைமையில், அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரைப்படி தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருக்கோயில் திருப்பணிகள், குடமுழுக்குகள், திருவிழாக்கள் மற்றும் தற்போது நடைபெற்று வரும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகியவற்றிற்குக் காரணமான தமிழக அரசுக்கு இம்மாநாட்டில் ஏகமனதாக நன்றி தெரிவித்துக்கொள்வது.

2. தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான அருள்மிகு முருகன் திருக்கோயில்களைத் தேர்வு செய்து திருப்பணிகள் மேற்கொள்வது . இத்தீர்மானத்தின் படி, முதற்கட்டமாக 143 முருகன் திருக்கோயி ல்களில் சுமார் 50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் தொடங்குவது .

3. அருள்மிகு முருகன் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள், ஓதுவார்கள், கலைஞர்கள் மற்றும் முருகன் அடியார்களைச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் 10 நபர்களுக்கு விருதுகள் வழங்குவது .

4. அறுபடை வீடு திருக்கோயில்களில், முருக பக்தி இலக்கியங்களை மையப்படுத்தி, திருவிழாக்கள் நடத்துவது .

5. முருக பக்தி இலக்கியங்களை மையப்படுத்தி இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயி ல்களின் சார்பில் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது .

6. அறுபடை வீடு பயணம் செய்யும் பக்தர்களின் எண்ணிக்கையை 2024-2025ம் ஆண்டுகளில் 1000-லிருந்து 1500-ஆக உயர்த்துவது .

7. அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நினைவாகப் பழநியில் ‘வேல்’ நிறுவுவது .

8. முருக வழிபாட்டிற்கு உகந்த, “கடம்ப மரக்கன்றுகள் மற்றும் அரிய வகை மரக்கன்றுகளை” முருகன் திருக்கோயில்களில் நட்டு பராமரிப்பது .

9. கந்தசஷ்டி விழாக் காலங்களில் அருள்மிகு முருகன் திருக்கோ யில்களில் மாணவ, மாணவியர்களைக் கொண்டு கந்த சஷ்டி பாராயணம் செய்விப்பது .

10. அருள்மிகு முருகன் திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம் செய்தல்; அவ்வாறு ஓதுவார்கள் நியமனம் செய்யும் பொழுது இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் ஓதுவார் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்குப் பணிநியமனத்தில் முன்னுரிமை வழங்குவது .

11. தேனூர் வரகவி சொக்கலிங்கனார் எழுதிய “சேய்த்தொண்டர் புராணம்” என்ற நூலை, தெளிவுரையுடன் கூடிய பதிப்பாக முதல் முறையாக வெளியிடுவது .

12. முருகப்பெருமானின் பெருமைகள் மற்றும் இலக்கியங்கள் குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் கல்லூரிகளில் சிறப்பு ஆன்மிகப் பாடப்பிரிவுகளை ஏற்படுத்த அரசுக்கு பரிந்துரைக்கலாம் .

13. வெளிநாட்டில் வாழும் முருக பக்தர்கள் தமிழ்நாட்டிற்கு வருகைதரும் போது, அவர்களுக்கு அறுபடை வீடு திருக்கோயில்களுக்குச் செல்ல சிறப்பு ஏற்பாடுகள் செய்து தருவது .

14. வெளிநாட்டில் வாழும் முருக பக்தர்கள் தமிழ்நாட்டிற்கு வருகைதரும் போது அவர்களுக்குத் திருவிழா மற்றும் சிறப்புக் காலங்களில் வழிபாட்டிற்கு உதவும் வகையில், கைபேசி செயலி மூலம் (Mobile App) வழிபாட்டு வசதிகள் செய்து தருவது .

15. திருக்கோயில்களில் தமிழுக்கு முன்னுரிமை தரும் வகையில், தமிழில் குடமுழுக்குகள் மற்றும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது.

16. முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிலைத்த அடையாளமாக ‘முத்தமிழ் முருகன் ஆய்வு மையம்’ அமைக்க அரசுக்கு பரிந்துரைக்கலாம் .

17. கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த குடியாம் தமிழ்குடியின் மருத்துவமாம் சித்த மருத்துவத்தை இனி வரும் காலங்களில் “தமிழர் சித்த மருத்துவம்” என்று அழைத்திட அரசுக்கு பரிந்துரைக்கலாம் .


18. தொன்மைச் சிறப்புடைய பாரம்பரியமான தமிழர் மருத்துவமே சித்த மருத்துவம். அம்மருத்துவத்தில் பிணி போக்குவதில் மணி மகுடமாக திகழ்கிற தமிழர் சித்த மருத்துவத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், அதனை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றிடவும், நவபாசானத்தில் போகர் சித்தரால் சிலை வடிக்கப் பெற்ற தமிழ்க் கடவுளான முருகப் பெருமான் வீற்றிருக்கும் பழனியில் “தமிழர் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம்” அமைத்திட அரசுக்கு பரிந்துரைக்கலாம் .

19. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கான ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஏதுவாக பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் முதற்கட்ட பணிகளையும், ரூ.158.90 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட பணிகளையும் விரைவு படுத்தி பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது .

20. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திர திருவிழாக்காலங்களில் பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு நாள் ஒன்றுக்கு 10,000 பக்தர்கள் வீதம் 20 நாட்களுக்கு 2,00,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி நாள் ஒன்றுக்கு 20,000 பக்தர்கள் வீதம் 20 நாட்களுக்கு 4,00,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவது .21. பழனி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை உலகெங்கும் வாழும் தமிழர்கள் மற்றும் முருக பக்தர்கள் பெருமை கொள்ளும் வகையில் சீரும் சிறப்புமாய் நடத்திட உறுதுணையாக இருந்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் , உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இம்மாநாட்டினை செவ்வனே நடத்திட உறுதுணையாக செயல்பட்ட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கும், சமயச் சான்றோர்களுக்கும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அரசு முதன்மைச் செயலர் , இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் , திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கும், அனைத்து அரசுத் துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், முழுமையாக ஒத்துழைப்பு நல்கிய பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கலைஞர் எனும் வரலாறு!



**நா** நயம் உடையவர் !
நாட்டின் நன்மைக்கு உரமானவர் !
நாற்பதையும் வெல்லும் திராவிட மாடலை உருவாக்கியவர் !
நாளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியானவர் !
நம் ஒவ்வொருவர் மனதிலும் நீங்கா ஒளியானவர் !
நல் வழி கூறும் பல காப்பியங்களை படைத்தவர் !
நல்லதோர் அரசை நடத்தி காட்டியவர்!
நாடகம், நடிப்பு, இலக்கியம் அனைத்திலும் முதன்மையானவர் !
நாட்டுப் பெண்களுக்கு அளித்த எண்ணற்ற திட்டத்தால் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தவர்!
நீங்காதிருந்த சாதி மத பேதத்தை அறவே நீக்கிக் காட்டியவர் !
நம் உயிர் காக்க காப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கியவர் !
நம் மேல் திணிக்கப்பட்ட இந்தித் திணிப்பை எதிர்த்துக் காட்டியவர் !
நம் தாய் மொழியாம் தமிழுக்குச் செம்மொழி மாநாட்டினை நடத்திக் காட்டியவர் !
நமது திராவிடத்தலைவரை பெற்றெடுத்து நாட்டிற்கென அர்ப்பணித்தவர் !
நவீன தமிழ்நாட்டின் சிற்பியானவர் !
நமது கழகத்தினருக்கு முரசொலி கடிதங்கள்
மூலம் என்றும் நெருக்கமானவர் !
நீக்கமற ஏழைகளின் நெஞ்சில் நிலையானவர் !
அனைத்திற்கும் மேல்
அவர் நாணயமானவர் அவர் தான் கலைஞர் !

இன்றைய செய்தியே நாளைய வரலாறு என்றவர் முத்தமிழறிஞர் கலைஞர்
நமது கழகத்தலைவர்
அவர் வரலாற்றின் தொடர்ச்சி
நாணயத்தில் பொறிக்கப்பட்டிருக்கும்
“தமிழ் வெல்லும்” எனும் கையெழுத்து
அவர் வரலாற்றின் சாட்சி

வரலாறு தொடரும் !



**முனைவர்.பி.பழனியப்பன்**
மேனாள் அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர்

# இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், ஆக. 27 -

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்டிக வருமாறு:



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி இராமநாத புரம் மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை ( 28.08.2024 - புதன்கிழமை) மாலை 03.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் முன்னாள் அமைச்சர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள ள்ளது.

இக்கூட்டத்தில் ளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள். பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் உள்ளிட்ட அனை வரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

**பொருள் :**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக நாணயம் வெளியீட்டிற்கு பாராட்டு தெரிவித்தல்.

செப்டம்பர் 11 கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் இராமநாதபுரம் வருகை.

ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துதல்.

இரண்டாம் கட்ட புதிய கழக உறுப்பினர் அட்டை வழங்குதல்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் OMR படிவம்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.,





முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி தி.மு.க. சார்பில் ஊமச்சி குளத்தில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி பந்தயத்தை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், சிறைச்செல்வன், ஆசைக்கண்ணன், நேரு பாண்டியன், வீரராகவன், வக்கீல் கலாநிதி, பெ.சசிகுமார், மருது பாண்டியன், கௌரி சங்கர், கே.பி. பூமிநாதன், வடிவேல், முருகன், மதிவாணன், ஒத்தக்கடை சரவணன், அழகு பாண்டி, கார்த்திக் ராஜா, ஆதிசங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசுத் துறைகளில் 15 ஆண்டுகள்

# பணிபுரிந்து ஓய்வு பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஆக. 27 -

ஒன்றிய அரசு துறையில் 15 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெரும் மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய திட்டத்தின்கீழ்ஓய்வூதியம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மாற்றுத்திறனாளிகள் மத்திய,மாநில அரசு துறைகளில் பணிகளில் சேருவதற்கு போட்டி தேர்வுகளில் பங்குபெற அவர்களு க்கான வயது தளர்வு 40 , 45 வயது”வரை வயது வரம்பு தளர்வு செய்யப்படுகிறது.

இதனால், மாற்றுத்திறனாளிகள் காலம் கடந்து பணியில் சேருகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் பணியில் சேர்ந்த பணிக்காலங்களை கணக்கிடும்போது. மாற்றுத்திறனாளிகளின் பணிக்காலங்கள் 15, 16, 17 ஆண்டுகளுக்கு மிகு குறைவான பணிக்காலமாக கணக்கிடப்படுகிறது.

இதனால் மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஓய்வூதிய திட்டத்தின்படி 25 ஆண்டுகள் பணிக்காலம் முடித்தவர்களுக்கு மட்டுமே புதிய ஓய்வூதியம் பெற தகுதியானவர்களாக கருதப்படுகிறார்கள்.

ஆனால் 40-45 வயது உள்ளவர்கள், அரசு அறிவிக்கும் வயது தளர்வின் காரணமாக பணியில் சேரும்போது மாற்றுத்திறனாளிகளின், பணி காலம் கணக்கிடும்போது புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்களாக பாதிக்கப்படுகிறார்கள்.

இதனால், மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஓய்வூதிய திட்டத்தில் மத்திய அரசு துறையில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்கென தனிக் கவனம் செலுத்தியும், சிறப்பினமாக கருதியும் அவர்கள் ஓய்வுதியம் பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகளின் பணிக்காலம் 15 ஆண்டுகள் நிர்ணயித்து மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக மத்திய அரசை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தனது அறிக்கையில் ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.